## நிதித் துறை

# கொள்கை விளக்கக் குறிப்பு

# மானியக் கோரிக்கை எண்.16

## 2012–2013

ஓ. பன்னீர்செல்வம்
நிதி அமைச்சர்

©
தமிழ்நாடு அரசு
2012

# பொருளடக்கம்


| வரிசை எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 1. | முகவுரை | 1 |
| 2. | கருவூலக் கணக்குத் துறை | 3 |
| 3. | உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை | 15 |
| 4. | கூட்டுறவு தணிக்கைத் துறை | 36 |
| 5. | சிறு சேமிப்புத் துறை | 42 |
| 6. | அரசுத் தகவல் தொகுப்பு விவர மையம் | 51 |
| 7. | அரசுத் துறை  நிறுவனத் தணிக்கைத் துறை | 60 |

# கொள்கை விளக்கக் குறிப்பு

# மானியக் கோரிக்கை எண்.16

# நிதித் துறை

# 2012–2013 ஆம் ஆண்டிற்கான கொள்கை விளக்கக் குறிப்பு

நிதித்துறையின் முக்கிய பணிகள்:

(i) தமிழக அரசின் பொது நிதி நிருவாகத்தினை மேலாண்மை செய்தல்

(ii) ஒவ்வொரு ஆண்டும் வரவு–செலவுத் திட்டத்தைத் தயாரித்து சட்டப் பேரவையில் தாக்கல் செய்தல்

(iii) மாநிலக் கருவூலத்தை நிருவகித்தல்

(iv) வரவுகளையும் செலவுகளையும் சீராகப் பராமரிக்கும் ஒட்டுமொத்த பொறுப்புடன் கடன் பொறுப்புகளைத் திருப்பிக் கொடுக்கும் பொறுப்பினையும் வகித்தல்

(v) ஒட்டுமொத்த வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு அரசின் நிதி இலக்குகளை எய்தும் பொருட்டு, வரவுக்கேற்றபடி செலவினங்களைச் சீர் செய்து, தேவை, செலவுக்கேற்ற பயன், வரவு–செலவுத் திட்ட நிதி ஒதுக்கம், நிதி நடைமுறை, முதலியவற்றிற்கேற்ப துறைகளின் செயற்குறிப்புகளை கூர்ந்தாய்வு மற்றும் மதிப்பீடு செய்தல்

**2.** நிதித்துறையின் நிருவாகக் கட்டுப்பாட்டின் கீழ் பின்வரும் ஏழு துறைகள் இயங்கி வருகின்றன:-

(i) கருவூலக் கணக்குத் துறை

(ii) உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை

(iii) கூட்டுறவு தணிக்கைத் துறை

(iv) சிறு சேமிப்புத் துறை

(v) அரசுத் தகவல் தொகுப்பு விவர மையம்

(vi) அரசுத் துறை – நிறுவனத் தணிக்கைத் துறை

(vii) ஓய்வூதிய இயக்ககம்

**3.** வரிசை எண் **(i)** முதல் **(vi)** வரை மேலே குறிப்பிடப்பட்டுள்ள துறைகளின் செயல்பாடுகள் பற்றிய விவரம் பின்வரும் பத்திகளில் அளிக்கப்பட்டுள்ளன. ஓய்வூதிய இயக்ககத்தின் செயல்பாடுகள் பற்றிய விளக்கம் கோரிக்கை எண்.**50** ‘‘ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகால பயன்களும்’’ குறித்த கொள்கை விளக்கக் குறிப்பில் சேர்க்கப்பட்டுள்ளது.

## கருவூலக் கணக்குத் துறை

4. பொன்விழா ஆண்டில் அடியெடுத்து வைத்திருக்கும் கருவூலக் கணக்குத் துறை **1962–**ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. அரசுக்குச் சேரவேண்டிய வரவுகள் மற்றும் செலவுகளை கணக்கிடுவது இத்துறையின் பொறுப்பாகும். மேலும் அரசுப் பணியாளர்களுக்கு ஊதியம் வழங்குவதும், ஓய்வூதியதாரர்களுக்கு ஓய்வூதியம் வழங்குவதும், பல்வேறு திட்டங்களை செயல்படுத்துவதற்கான அரசு ஒப்பளித்த தொகையினை வழங்குவதும் இத்துறையின் பொறுப்பாகும். நீதிமன்றம் சார்ந்த மற்றும் நீதி மன்றம் சாராத முத்திரை தாள்கள் மற்றும் முத்திரைவில்லைகளை அங்கீகரிக்கப்பட்ட விற்பனையாளர்கள் மற்றும் நிறுவனங்களுக்கு முறையாக வழங்கும் பணியையும் இத்துறை மேற்கொண்டுள்ளது. அரசு துறைகளால் காப்பறையில் வைப்பீடு செய்யப்படும் விலைமதிப்பு வாய்ந்த மற்றும் பாதுகாக்கப்படவேண்டிய பொருள்களுக்கு கருவூல அலுவலர்கள் பொறுப்பாவார்கள்.

5. இத்துறையின் கீழ் 32 மாவட்டக் கருவூலங்கள் மற்றும் கடைசியாக துவங்கப்பட்ட புதுக்கோட்டை மாவட்டம் மணல்மேல்குடி சார் நிலை கருவூலம் உட்பட 206 சார் கருவூலங்கள் உள்ளன. இவை அனைத்தும் மூன்று மண்டல இணை இயக்குநர்களின் மேற்பார்வையின் கீழ் செயல்படுகின்றன. இத்துறையில் 9 சம்பளக் கணக்கு அலுவலகங்கள், ஒரு ஓய்வூதிய வழங்கும் அலுவலகம் மற்றும் ஒரு உதவி முத்திரை தாள் வழங்கும் அலுவலகம் ஆகியன அவற்றுக்கு தொடர்புடைய பணிகளைக் கையாளுகின்றன.

**கருவூலக் கட்டடங்கள் கட்டுதல்**

6. கருவூலக் கணக்குத் துறையின் 32 மாவட்டக் கருவூலங்களுள் 29 மாவட்டக் கருவூலங்கள் அரசுக் கட்டடங்களிலும் எஞ்சியுள்ள சென்னை, தூத்துக்குடி, திருப்பூர் ஆகிய 3 மாவட்டக் கருவூலங்கள் வாடகைக் கட்டடங்களிலும் இயங்கி வருகின்றன. வருவாய் வட்ட அளவில் இயங்கி வரும் 206 சார் கருவூலங்களுள் 154 சார் கருவூலங்கள் அரசுக் கட்டடங்களிலும் எஞ்சியுள்ள 52 சார் கருவூலங்கள் வாடகைக் கட்டடங்களிலும் இயங்கி வருகின்றன. நிருவாக வசதிக்காகவும், வாடகை குறித்த செலவினை தவிர்த்திடவும் அனைத்து மாவட்ட மற்றும்

சார் கருவூலங்களையும் அரசு கட்டடங்களுக்கு மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

**புதிய சார் கருவூலங்கள் அமைத்தல்**

7. தமிழ்நாட்டின் 32 மாவட்டங்களில் 220 வருவாய் வட்டங்கள் உள்ளன. அரசின் கருவூலப் பணிக்கென வருவாய் வட்ட அளவில் சார் கருவூலங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. தற்போது 190 வருவாய் வட்டங்களில் 206 சார் கருவூலங்கள் இயங்குகின்றன. 16 வருவாய் வட்டங்களில் தலா இரண்டு சார் கருவூலங்கள் உள்ள நிலையில் 30 வருவாய் வட்டங்களில் சார் கருவூலம் இல்லை. ஒரு வருவாய் வட்டத்திற்கு ஒரு சார் கருவூலம் என்ற அடிப்படையில் கருவூல அமைப்பினை சீரமைத்து சார் கருவூலமில்லாத வருவாய் வட்டங்களில் புதிய சார் கருவூலங்களை ஏற்படுத்திட நடவடிக்கை எடுக்கப்படும்.

**தன்னியக்க கருவூல பட்டியல் ஏற்பளிப்பு முறை**

8. தற்போது பின்பற்றப்படும் நடைமுறையில் சம்பளக் கணக்கு அலுவலகம் / கருவூலத்தில் ஆளியக்க முறையில், தொடர் நடவடிக்கை பற்றிய பதிவின்றியும் எளிதில் கையாள முடியாத கணக்குத் தொகுப்புடனும்

பட்டியல்கள் ஆய்வு செய்யப்படுகின்றன. பட்டியல்களை விரைவாகப் பரிசீலிக்கவும், கணக்குகளை விரைவாகவும் துல்லியமாகவும் தொகுப்பதை உறுதி செய்யவும், கருவூலக் கணக்குத் துறையினை முழுமையாக கணினி மயமாக்குவதற்கான மின் ஆளுமையும் ஒரு முனைப்பாக தன்னியக்க கருவூலப் பட்டியல் ஏற்பளிப்பு முறை அறிமுகப்படுத்தப்பட்டது. இம்முறைக்காக தயாரிக்கப்பட்ட மென்பொருளானது பட்டியல், காசோலை, மின்னணு தீர்வு முறை, வரவினம் தொடர்புடைய விபரங்களை பதிவு செய்வதுடன், பட்டியல்களை பல்வேறு நிலைகளில் ஆய்வு செய்கிறது. இந்த முறையின் மூலம் பட்டி மற்றும் செலுத்துச்சீட்டின் போக்கினை அறிய இயலும். இது அன்றாட பரிவர்த்தனைகளைப் பட்டியலிடவும், கணக்குகளை தொகுக்கவும் பயனுள்ளதாக உள்ளது.

**9.** தொடக்கத்தில் இது முன்னோடி திட்டமாக, **2007**–ஆம் ஆண்டில் சம்பளக் கணக்கு அலுவலகம் (தலைமைச் செயலகம்), சென்னை, தேனி மற்றும் கரூர் மாவட்ட / சார் கருவூலங்களில் நடைமுறைபடுத்தப்பட்டது. பின்னர் **2010**–ஆம் ஆண்டு சம்பளக் கணக்கு

அலுவலகம் (மதுரை), சம்பளக் கணக்கு அலுவலகம் (புதுடெல்லி தமிழ்நாடு இல்லம்), கோயம்புத்தூர், திருச்சி, மதுரை, இராமநாதபுரம் மற்றும் பெரம்பலூர் மாவட்டங்களில் உள்ள கருவூலங்களுக்கு விரிவுபடுத்தப்பட்டது. தன்னியக்க கருவூலப் பட்டியல் ஏற்பளிப்பு முறை மேலும் 23 மாவட்டங்கள் (23 மாவட்ட கருவூலங்கள் மற்றும் 157 சார் கருவூலங்கள்), 3 சம்பளக் கணக்கு அலுவலகங்கள், 2 சார் சம்பளக் கணக்கு அலுவலகங்களுக்கு ரூ.21.61 கோடி செலவில் விரிவுபடுத்தப்பட்டு வருகிறது. மீதமுள்ள மாவட்ட மற்றும் சார் கருவூலங்களையும் இம்முறையின் கீழ் கொண்டு வருவதற்கு தொடர்ந்து முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தன்னியக்க கருவூலப் பட்டியல்கள் ஏற்பளிப்பு முறை, மாநிலத்தில் திறமையான நிதி மேலாண்மையில் உதவிடும் கணக்குகளை எளிதாக உரிய நேரத்தில் தொகுத்திடவும், மேலாண்மை தகவல் முறை அறிக்கைகளை தயாரித்திடவும் பயனுள்ளதாக உள்ளது.

**10.** மின்னணு மூலம் ஓய்வூதியம் வழங்கும் முறை முதன் முதலாக ஓய்வூதியம் வழங்கும் அலுவலகம், சென்னை, கோயம்புத்தூர், தஞ்சாவூர், திருவள்ளூர், கிருஷ்ணகிரி, ஈரோடு, மதுரை மற்றும் தேனி ஆகிய 7 மாவட்டங்களில் முன்னோட்டமாக செயல்படுத்தப்பட்டுள்ளது. ஓய்வூதியதாரர்கள் பயன்பெறும் வகையில் ஓய்வூதியர்களுக்கு விரைவாக மற்றும் மேம்படுத்தப்பட்ட சேவை வழங்கும் பொருட்டு மாநில கணக்காயர் அலுவலகம் மற்றும் ஓய்வூதியம் பிரேரணை அனுப்பும் அலுவலர்கள் இந்த வலை அடிப்படையிலான மென்பொருளை கையாளும் வகையில் மென்பொருளை மேம்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. இம்மென்பொருள் மேம்படுத்தப்பட்டபின் பிற மாவட்டங்களிலும் படிப்படியாக **2012–2013–**ஆம் ஆண்டு முதல் மின் ஓய்வூதிய முறை அமுல்படுத்தப்படும்.

**11.** புதிய மருத்துவ காப்பீடு திட்டமானது இத்துறையில் நிர்வகிக்கப்பட்டு அதன் மூலம் அனைத்து அரசுத் துறை, பொதுத்துறை நிறுவனங்கள், உள்ளாட்சி நிறுவனங்கள், சட்டபூர்வ வாரியங்கள் மற்றும் பல்கலைக்கழங்களில் உள்ள பணியாளர்கள் மற்றும்

அவர்களின் குடும்ப உறுப்பினர்களுக்கு இத்திட்டத்தின் கீழ் மருத்துவ உதவிகள் வழங்கப்படுகிறது. இதுவரை 12.48 லட்சம் பணியாளர்கள் இத்திட்டத்தின் கீழ் சேர்க்கப்பட்டு 31.03.2012 வரை 1,51,569 பணியாளர்கள் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்களுக்கு காப்பீட்டு நிறுவனம் மூலம் ரூ.411.49 கோடி மருத்துவ உதவியாக வழங்கப்பட்டுள்ளது.

12. பொதுப்பணித்துறை, வனத்துறை மற்றும் நெடுஞ்சாலைத் துறையிலுள்ள பணியாளர்களின் சம்பளம் மற்றும் இதர செலவினங்கள் தற்பொழுது வழங்கப்பட்டு வரும் கடன் சான்று முறையை 01.04.2012 முதல் மாற்றியமைத்து கருவூலம் மூலம் மின்னணு வழியாக வழங்க அரசாணை (நிலை) எண்.62, நிதி (கடன் சான்று)த் துறை, நாள் 12.03.2012 மூலம் ஆணையிடப்பட்டுள்ளது.

13. 2011–2012–ஆம் ஆண்டில் குடிமுறை அரசுப் பணி பயிற்சி நிலையம், பவானி சாகர் மூலம் சிறப்பு நிகழ்வாக, குறுகிய கால அடிப்படை பயிற்சி 380 இளநிலை உதவியாளர்களுக்கு கோயம்புத்தூர், வேலூர், தூத்துக்குடி மற்றும் திருச்சி ஆகிய

4 மையங்களில் அளிக்கப்பட்டது. இதேபோல், நேரடியாக நியமனம் செய்யப்பட்ட 656 கணக்கர்களுக்கு 2012–2013–ஆம் ஆண்டில் அடிப்படை பயிற்சி வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இத்துறையின் அனைத்து பணிகளும் கணினிமயமாக்கப்பட்டிருப்பதால், கணினிப் பயிற்சி மூலம் அனைத்துப் பணியாளர்களுக்கும் புள்ளி விவர மேலாண்மைமுறை (Data Base Management System), வலைப்பணி (Net working), கணினி இயக்கு முறை (Windows and Linux),கணிப்பொறி அலுவலகத் தொகுப்பு ஆகிய பயிற்சிகள் அண்ணா மேலாண்மை நிலையம், தமிழ்நாடு மின் ஆளுமை முகமை, தேசிய தகவல் மையம் ஆகியவற்றின் மூலம் அளிக்கப்பட்டு வருகிறது. இப்பயிற்சி 2011–2012–ஆம் நிதியாண்டில் 200 பணியாளர்களுக்கு அளிக்கப்பட்டுள்ளது. 2012–2013–ஆம் நிதியாண்டில் மேலும் 400 பணியாளர்களுக்கு இப்பயிற்சி அளிக்கப்படவுள்ளது.

## ஒருங்கிணைந்த நிதி மேலாண்மைத் திட்டம்
## (Integrated Financial Management System)

14. ஒருங்கிணைந்த நிதி மேலாண்மைத் திட்டமானது அரசின் கருவூல பணிகளை மேற்கொள்வதற்கான நீண்ட கால தீர்வுக்கும், மாநிலத்தில் செலவு மற்றும் வரவு குறித்த தொகுக்கப்பட்ட மற்றும் நிலையான தகவல்களுக்கும் ஒரு கருவியாக செயல்படுகிறது. இது நிதி நிகழ்வுகளை கண்காணிப்பதுடன் தகவல்களை தொகுத்துரைக்கிறது. வெளிப்படையாக அறிவித்தல், கொள்கை முடிவுகள், நிதி குறித்த விவர அறிக்கைகளை தயாரித்தல் போன்றவற்றிற்கு இது பயனுள்ளதாக இருக்கும். இதன் காரணமாக பல்வேறு நிலைகளில் உள்ள பணியாளர்களின் பணிச்சுமை மற்றும் சிரமங்கள் குறைக்கப்படுவதோடு அலுவலகத்தில் காகிதத்தின் பயன்பாடும் பெருமளவு குறையும். இச்செயல்பாட்டின் மூலம் நிதித்துறை, கருவூலத் துறை மற்றும் பிற அரசுத் துறைகளுக்கிடையேயான பரிவர்த்தனைகளை சிக்கலின்றி கையாளும் சூழல் அமைவதோடு, மாநில நிதி மேலாண்மை குறித்த பணிகளைத் திறம்பட நிர்வகிக்க இயலும்.

15. ஒருங்கிணைந்த நிதி மேலாண்மைத் திட்டம், வரவு செலவு கட்டுப்பாடு, பணப்புழக்க மேலாண்மை மேம்பாடு, தினசரி கணக்கு ஒத்திசைவினை மேம்படுத்துதல், துல்லிய மற்றும் குறித்த நேர கணக்குத் தயாரிப்பினை செம்மைப்படுத்துதல் ஆகியவற்றிற்கு பயனுள்ளதாக இருக்கும். பொது மக்களுக்கான சேவையை வெளிப்படையாகவும், திறனுடனும் செயல்படுத்தவும், முறைகேடுகளைத் தவிர்த்து அரசு ஆளுகையின் தரத்தை உயர்த்தி சிறந்த வகையில் நிதி மேலாண்மைப் பணிகளை மேற்கொள்ளவும் இது மேலும் உதவியாக இருக்கும்.

16. மனிதவள மேலாண்மைத் திட்டத்தை செயல்படுத்தி அதனை ஒருங்கிணைந்த நிதி மேலாண்மைத் திட்டத்துடன் இணைப்பதன் மூலம் சம்பளப் பட்டியல்கள் தயார் செய்து சமர்ப்பித்தல், ஓய்வூதிய மேலாண்மை, பணியாளர்களுக்கு கடன் ஒப்பளிப்பு செய்து திரும்பப் பெறுதல், பணிப்பதிவேடுகள் பராமரித்தல் ஆகியவற்றை முழுமையாக தன்னியக்கமயமாக்கிடலாம். ஒருங்கிணைந்த நிதி

மேலாண்மைத் திட்டக் கருத்துருவை தற்போது நடைமுறையிலுள்ள நிதி மேலாண்மை முறை குறித்து முழுமையாக ஆய்வு செய்து திட்டம் செயல்படுவதை உறுதி செய்யும் வகையில் ஒரு ஆலோசகரை நியமிக்க உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

### பொதுவாக செலுத்தும் முறை (Common Payment Gateway)

17. அரசு வருவாய் வரவுகள் அனைத்தும் வங்கிகள் மூலம் பெறப்படுவதால், பணம் செலுத்துபவர் ஒவ்வொரு முறையும் வங்கிக்கு செல்ல வேண்டியுள்ளது. மேலும் அரசுத் துறைகள் காசோலைகள் / வரைவு காசோலைகளைப் பெற்று அங்கீகரிக்கப்பட்ட வங்கிகள் மூலம் அரசுக் கணக்கில் வரவு வைப்பதில் கணிசமான காலதாமதம் ஏற்படுகிறது. கணக்குகள் ஆளியக்க முறையில் தயாரிக்கப்படுவதால் அவற்றை தவறாக வகைப்படுத்திட வாய்ப்புள்ளதால் அதனை ஒத்திசைவு செய்வதும் கடினமாக உள்ளது. மேலே கூறப்பட்டுள்ள நடைமுறையினை எளிமைப்படுத்திட ஏதுவாக பொதுவாக செலுத்தும் முறையை தொடங்கிட உத்தேசிக்கப்பட்டுள்ளது. அரசுக்கு பணம் செலுத்துவது, திரும்பப் பெறுவது தொடர்பாக வங்கிகளுடன் தொடர்பு

கொள்வது, ஒரே சேவை மூலமாக சேவை நாடுவோரின் தேவைகளை நிறைவேற்றுவது, பொது மக்கள் இணையம் மற்றும் இணையமல்லாத வகைகளில் பணம் செலுத்துவது, கால விரையத்தைத் தவிர்த்து முழுமையான சேவையை அளிப்பது, பொதுவாக செலுத்தும் முறையை ஒருங்கிணைப்பதன் மூலம் ஒவ்வொரு துறையும் இதற்கென செலவிடுவதைக் குறைப்பது போன்ற பல பயன்கள் கிடைக்க இது வழிவகுக்கும்.

**மையக் குழு அமைத்தல் (Constitution of Core Committee)**

**18.** ஒருங்கிணைந்த நிதி மேலாண்மைத் திட்ட செயலாக்கத்தின் முன்னேற்றத்தைக் கண்காணிப்பதற்காக ஒரு மையக் குழு (Core Committee) அமைக்கப்பட வேண்டியுள்ளது. இது தவிர, கணினிப்பணி ஒருங்கிணைப்பாளர் தேர்வு செய்யப்பட்டவுடன் இத்திட்ட செயல்பாட்டில் பங்கு பெறும் ஒவ்வொரு துறையிலும் ஒரு திட்ட மின்-பணிக்குழு அமைக்கப்படவேண்டும். நிறுவன அமைப்பு, அணியின் திறன், பங்கு மற்றும் பொறுப்புகள், பணியாளர் அமைப்பு குறித்து உரிய வழிகாட்டுதல்களை ஒருங்கிணைந்த நிதி மேலாண்மைத் திட்டத்தின் ஆலோசகர் வழங்குவார்.

## உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை

**19.** நகர்ப்புற மற்றும் ஊரக உள்ளாட்சி அமைப்புகள், பல்கலைக் கழகங்கள், வேளாண்மை விற்பனைக் குழுக்கள், உள்ளூர் நூலக அதிகாரமன்றங்கள் மற்றும் ஏனைய பிற நிறுவனங்களின் கணக்குகளை அவற்றிற்குரிய சட்ட விதிகளின் கீழ், சட்டப்படிக்கான தணிக்கையிடும் பணியை உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை மேற்கொண்டு வருகிறது. தற்போதைய நிலவரப்படி, கீழ்கண்ட நிறுவனங்கள் உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையின் தணிக்கைக் கட்டுப்பாட்டின் கீழ் செயல்பட்டு வருகின்றன.

| தொடர் எண் | நிறுவனங்கள் | மொத்த எண்ணிக்கை |
|---|---|---|
| i. | மாநகராட்சிகள் | 10 |
| ii. | நகராட்சிகள் | 125 |
| iii. | பேரூராட்சிகள் | 529 |
| iv. | மாவட்ட ஊராட்சிகள் | 29 |
| v. | ஊராட்சி ஒன்றியங்கள் | 385 |
| vi. | பல்கலைக் கழகங்கள் | 23 |
| vii. | உள்ளூர் நூலக அதிகாரமன்றங்கள் | 30 |

| தொடர் எண் | நிறுவனங்கள் | மொத்த எண்ணிக்கை |
|---|---|---|
| viii. | வேளாண்மை விற்பனைக்குழுக்கள் | 21 |
| ix. | தமிழ்நாடு வேளாண்மை விற்பனை வாரியம் | 1 |
| x. | வேளாண்மை பொறியியல் பிரிவு | 2 |
| xi. | கோயம்பேடு விற்பனைக் குழு | 1 |
| xii. | தேசிய சமூக நலத் திட்டங்கள் | 29 |
| xiii. | உள்ளூர் திட்டக் குழுமங்கள் | 26 |
| xiv. | கிராம ஊராட்சிகள் (சோதனைத் தணிக்கை மட்டும்) | 2523 |
| xv. | இதர நிறுவனங்கள் | 9 |

**உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையின் நோக்கம்**
**உள்ளாட்சி நிறுவனங்களின் தணிக்கை**

**20.** உள்ளாட்சி நிதித் தணிக்கையின் தணிக்கைக் குழுக்கள் உள்ளாட்சி நிறுவனங்களின் கணக்குகளைச் சரிபார்த்தல், தணிக்கை மேற்கொள்ளும் நிறுவனங்களின் வரவு செலவுகளின் மீது தனியுரிம தணிக்கை போன்ற பணிகளை மேற்கொள்ளுதல், உள்ளாட்சி நிறுவனங்களின் பணப்பரிவர்த்தனைகள் சட்டத்திற்கும், விதிகளுக்கும் மற்றும் அரசின் ஆணைகளுக்கும் உட்பட்டு நடைபெறுகிறதா என்பதையும், கணக்குகள் உண்மை நிலையை பிரதிபலிக்கின்றதா என்பதை உறுதி

செய்யும் வகையில் மேற்கொள்கின்றன. அரசு மற்றும் பிற நிதியுதவி அளிக்கும் நிறுவனங்கள் வழங்கும் நல்கை நன்முறையில் பயன்படுத்துவதையும் மற்றும் உள்ளாட்சி நிறுவனங்களுக்கு வரி செலுத்துவோரின் நலன்களை பாதுகாப்பதையும், சமுதாய நலனுக்கு இத்தொகை முழுமையாக பயன்படுத்தப்படுவது சரிபார்த்தல் போன்றவற்றை உள்ளாட்சி நிதித் தணிக்கை உறுதி செய்கிறது.

**கிராம ஊராட்சிகள் சோதனை தணிக்கை**

21. மொத்த கிராம ஊராட்சிகளில் 20 விழுக்காடான 2,523 கிராம ஊராட்சிகளில் சோதனைத் தணிக்கைகள் இத்துறையால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இத்துடன் ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்துராஜ் ஆணையரால் அனுப்பப்படும் குறிப்பான புகார்களின் அடிப்படையில் 2 விழுக்காடு கிராம ஊராட்சிகளின் வரவினங்கள், மேற்கொள்ளப்பட்ட பணிகளின் மதிப்புகள் ஆகியவற்றை தணிக்கையிடும் பணிகள் இத்துறையால் மேற்கொள்ளப்படுகிறது.

**உலக வங்கி நிதி உதவி பெறும் நிறுவனங்களின் தணிக்கை**

22. உலக வங்கி நிதி உதவி பெறும் நிறுவனங்களின் தணிக்கையும் இத்துறையால் மேற்கொள்ளப்படுகின்றன. கோயம்புத்தூர், தமிழ்நாடு விவசாய பல்கலைக் கழகத்தால் மேற்கொள்ளப்படும் உலக வங்கி நிதி உதவித் திட்டங்களின் தணிக்கை இத்துறையிடம் ஒப்படைக்கப்பட்டு 2010–2011 வரையிலான தணிக்கை முடிக்கப்பட்டுள்ளது.

**நகர்ப்புற உள்ளாட்சி நிறுவனங்கள், பஞ்சாயத்து ராஜ் நிறுவனங்கள் மற்றும் பல்கலைக் கழகங்களின் உடன் தணிக்கை**

23. உடன் தணிக்கை முறை வழக்கத்திலுள்ள 10 மாநகராட்சிகளிலும், 15 நகராட்சிகளிலும் மற்றும் 14 பல்கலைக் கழகங்களிலும் தணிக்கை குழுக்கள் செயல்பட்டு வருகின்றன. 2000–2001 ஆம் ஆண்டு முதல், 385 ஊராட்சி ஒன்றியங்கள் அனைத்திலும் உடன் தணிக்கை முறையை அரசு அறிமுகப்படுத்தியுள்ளது. இதன்படி தேர்ந்தெடுக்கப்பட்ட 116 ஊராட்சி ஒன்றிய அலுவலகங்களில் ஒவ்வொரு மூன்று அல்லது நான்கு ஊராட்சி ஒன்றியங்களுக்கு ஒரு ஆய்வாளர் மற்றும் ஒரு

துணை ஆய்வாளர் / ஒரு உதவி ஆய்வாளர் அடங்கிய ஒரு குழு வீதம் தணிக்கைக் குழுக்கள் இதற்கென அமைக்கப்பட்டுள்ளன.

**அனைத்து மாநகராட்சிகள் மற்றும் தெரிவு செய்யப்பட்ட நகராட்சிகளில் உடன்பின் தணிக்கை முறை செயலாக்கம்**

**24.** உடன் பின்தணிக்கை மேற்கொள்ளப்படும் 10 மாநகராட்சிகள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட 15 நகராட்சிகளிலும் உடன் தணிக்கை பிரிவுகள் செயல்பட்டு வருகின்றன. இம்முறையின்படி, செலவினங்கள் மேற்கொள்ளப்பட்டு தொகை வழங்கப்பட்டவுடன், செலவுச் சீட்டுக்கள் உடனுக்குடன் தணிக்கை செய்யப்பட்டு, தணிக்கை குறைபாடுகள் நிருவாகத்திற்கு தெரிவிக்கப்படுகின்றது. தணிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட குறைகளை உடனுக்குடன் களைய இச்செயல்முறை வழிவகை செய்கிறது.

**25.** உடன் தணிக்கையின்போது, தணிக்கையில் கண்டறியப்படும் தணிக்கை மறுப்புரைகள், “தணிக்கைச் சீட்டுகள்” வாயிலாக உடனுக்குடன் சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு தெரிவிக்கப்பட்டு, அவற்றிற்கு பெறப்படும் பதில்கள் சரிபார்க்கப்பட்டு குறைகள் சரி

செய்யப்பட்டதை உறுதி செய்வதன்பேரில், அந்த தணிக்கை மறுப்புரைகள் நீக்கப்பட்டு, நிலுவையில் உள்ள மறுப்புரைகளை உள்ளடக்கிய தணிக்கை அறிக்கைகள் வெளியிடப்படுகின்றன. அவ்வாறு தணிக்கை அறிக்கைகள் வெளியிட்ட பின்னர், தணிக்கை அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள குறைகள் குறித்துப் பெறப்படும் பதில்கள் சம்பந்தப்பட்ட நிறுவனப் பதிவேடுகள் மற்றும் ஆவணங்களோடு தணிக்கைக் குழுவினரால் ஒப்பிட்டு சரிபார்க்கப்பட்டு, தணிக்கை மறுப்புரைகளுக்கு தீர்வு காணப்படுகின்றன.

**உடன் தணிக்கைக்குட்படாத பிற நிறுவனங்களின் ஆண்டுத் தணிக்கை**

**26.** உடன் தணிக்கைக்குட்படாத எஞ்சியுள்ள **110** நகராட்சிகள், **9** பல்கலைக்கழகங்கள், இதர உள்ளாட்சி நிறுவனங்களான பேரூராட்சிகள், மாவட்ட ஊராட்சிகள், விற்பனைக் குழுக்கள், உள்ளூர் நூலகக் குழுமங்கள், உள்ளூர் திட்டக் குழுமங்கள் மற்றும் பல்வகை நிறுவனங்களின் தணிக்கை, ஆண்டுதோறும் மேற்படி நிறுவனங்களிலிருந்து ஆண்டுக் கணக்குகள் பெறப்பட்டபின்னர் மேற்கொள்ளப்படுகிறது.

**நகர்ப்புற உள்ளாட்சி நிறுவனங்களில் சேர்ந்துவரும் அடிப்படையிலான கணக்கு முறையை (Accrual based) செயற்படுத்துதல்**

27. நகர்ப்புற உள்ளாட்சி நிறுவனங்களில் பின்பற்றப்பட்டு வந்த ரொக்க அடிப்படையிலான கணக்கு வைப்பு முறைக்குப் பதிலாக, மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் சேர்ந்துவரும் அடிப்படையிலான கணக்கு முறை (Accrual based Accounting System) 1999–2000, 2000–2001 ஆகிய கணக்கு ஆண்டுகளிலிருந்து இரு கட்டங்களாக செயற்படுத்தப்பட்டுள்ளது. 2002–2003 ஆம் ஆண்டு முதல் இந்தக் கணக்கு முறை பேரூராட்சிகளிலும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

28. ஓர் ஆண்டின் நிதி சார் நடவடிக்கைகளைத் தெரிந்துகொள்ள உதவும் வருவாய் மற்றும் செலவுக் கணக்குகளையும் (Income and Expenditure Account) ஒரு குறிப்பிட்ட கால அளவில் நகர்ப்புற உள்ளாட்சி நிறுவனங்களின் உண்மையான நிதிநிலையை அறிந்து கொள்ள உதவும் இருப்புநிலை கணக்குகளையும் (Balance Sheet) பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட

கணக்கு வைப்பு முறை கோட்பாட்டின்படி தயாரித்து கணக்குகள் பேணுவதே இந்த கணக்கு முறையின் இலக்கு மற்றும் நோக்கமாகும்.

29. இந்த நடைமுறையினால் நகர்ப்புற உள்ளாட்சி மன்றங்கள் அவற்றின் சொத்துக்களை உரிய மதிப்பீட்டு முறைகளோடும், சொத்து பதிவேட்டின் மூலமும் கணக்குகளில் சேர்த்து அறிந்துகொள்ள முடியும். நகர்ப்புற உள்ளாட்சி மன்றங்கள் மேம்படுத்தப்பட்ட கணக்கு முறைகளைச் செயல்படுத்தியிருப்பதால், மூலதன திட்டங்கள் மற்றும் நலத்திட்டங்களுக்கும் நிதியுதவி அளிக்க நிதி நிறுவனங்கள் முன்வந்துள்ளன. இதன் மூலம் நகர்ப்புற உள்ளாட்சி மன்றங்களின் நிதி ஆதாரங்கள் வலுப்படுத்தப்பட்டுள்ளன.

30. அனைத்து மாநகராட்சிகளிலும், நகராட்சிகளிலும் பேணப்பட்டு வரும் கணக்குமுறை சீர்திருத்தங்களை இரண்டு கட்டங்களாக **1999–2000** மற்றும் **2000–2001** ஆம் ஆண்டு முதற்கொண்டும், பேரூராட்சிகள் அனைத்திலும் **2002–2003** ஆம் ஆண்டு முதற்கொண்டும், இந்தியாவில் வெற்றிகரமாக

செயல்படுத்தியதால், தமிழ்நாடு முதல் மாநிலம் என்ற பெருமையை பெற்றுள்ளது.

**உள்ளாட்சி நிறுவனங்களின் ஆண்டு கணக்குகள் மற்றும் பல்கலைக் கழகங்களின் ஆண்டு கணக்குகளுக்கு தணிக்கைச் சான்று வழங்குதல்**

31. முறையான சான்றளிக்கப்படாத கணக்குகள் அர்த்தமற்றவை. 28.03.2003–ஆம் நாளிட்ட அரசாணை நிலை எண்.93, நிதி (நிதிக்குழு – IV) ன் படி, உண்மை நிலையை பிரதிபலிக்கும் கணக்கு முறையை நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் நடைமுறைப்படுத்துவதன் அடிப்படையிலும், நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் கணக்குகள், உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை அலுவலர்களால் தற்பொழுது சான்றளிக்கப்பட்டு வருகிறது.

32. கோயம்புத்தூர், வேளாண்மை பல்கலைக் கழகத்தில் உலக வங்கி நிதியுதவியுடன் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள தமிழ்நாடு நவீன பாசன வேளாண்மை, நீரமைப்பு மீட்புப் பணி மற்றும் மேலாண்மைத் திட்டத்திற்கு (IAMWARM) இத்துறையினால் தணிக்கைச் சான்று அளிக்கப்படுகிறது.

**தணிக்கை படிவங்களை தரப்படுத்துதல் மற்றும் தணிக்கை நடைமுறை நூலை திருத்தி அமைத்தல்**

**33.** தணிக்கையின் தரத்தினை மேம்படுத்தவும், தணிக்கை மறுப்புரைகளை நிர்வாகத்திற்குத் தெரிவிக்கும் முறையில் ஒரு சீரான முறையை உறுதிபடுத்திடவும் ஏதுவாக, நகர்ப்புற உள்ளாட்சி நிறுவனங்கள் மற்றும் பஞ்சாயத்து ராஜ் நிறுவனங்களின் தணிக்கைப் படிவங்கள் தரப்படுத்தப்பட்டுள்ளன. உள்ளாட்சி நிதித் தணிக்கை நடைமுறை நூலில், **2008**–ஆம் ஆண்டு வரையிலான திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**தணிக்கை மறுப்புரைகளை தீர்வு செய்யும் நடைமுறை**

34. தணிக்கை அறிக்கைகளின் மீது மேல் நடவடிக்கை எடுப்பது இத்துறையின் இன்றியமையாத பணிகளில் ஒன்றாகும். தணிக்கையின் போது கண்டறியப்படும் கடுமையான முறைகேடுகள் உடனடியாக சம்பந்தப்பட்ட உள்ளாட்சி நிறுவனங்களின் நிருவாக அதிகாரிகளின் கவனத்திற்கு எடுத்துச் செல்லப்படுகின்றன. தணிக்கை அறிக்கைகளில் சுட்டிக் காட்டப்பட்டுள்ள கடுமையான முறைகேடுகள் மற்றும்

ஏற்பட்ட தொகை இழப்புகள் பற்றிய விவரங்கள் மாதாந்திர கால முறை அறிக்கைகள் மற்றும் தனி அறிக்கைகள் மூலம் அரசுக்கும் சம்பந்தப்பட்ட நிர்வாகத் துறைகளின் தலைவர்களுக்கும் மேல்நடவடிக்கை எடுக்கும் பொருட்டு தெரிவிக்கப்படுகின்றன.

35. தணிக்கை மறுப்புரைகளுக்கு பெறப்படும் பதில்கள் சரிபார்க்கப்பட்டு தணிக்கை மறுப்புரைகள் வழக்கமாக நீக்கப்படுகின்றன. மேலும் தணிக்கை மறுப்புரைகளுக்கான பதில்கள் பெறப்பட்டு, தொடர்புடைய நிர்வாகத் துறை ஏற்பாடு செய்யும் கூட்ட அமர்வின் மூலமாகவும் இத்துறையின் மண்டல மற்றும் மாவட்ட அலுவலர்களாலும் தணிக்கை மறுப்புரைகளுக்கு உடனடி தீர்வுகள் காணப்படுன்றன.

36. தணிக்கையின் போது தொடக்க நிலை மற்றும் இறுதி நிலை விவாதமுறை பின்பற்றப்படுவதால், தணிக்கையில் அவ்வப்போது சுட்டிக்காட்டப்படும் தவறுகளைச் சரி செய்ய இது வாய்ப்பாக அமைகிறது. அரசாணை (நிலை) எண் 83, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்: 01.06.2009–ல் இது தொடர்பாக பின்பற்றப்பட வேண்டிய விரிவான வழிகாட்டுதல்களை அரசு வழங்கியுள்ளது.

**மாவட்ட அளவிலான உயர் நிலைக் குழுக்கள் மற்றும் மாநில அளவிலான உயர்மட்டக் குழு அமைத்தல்**

37. ஊராட்சி ஒன்றியங்களைப் பொறுத்தமட்டில், மாவட்ட ஆட்சியரைத் தலைவராகக் கொண்டு மாவட்ட உயர்நிலைக் குழுக்களும், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை ஆணையரைத் தலைவராகக் கொண்டு மாநில உயர்மட்டக் குழுவும் அமைக்கப்பட்டுள்ளது. **2011–**ஆம் ஆண்டில், **58** மாவட்ட உயர்நிலைக் குழுக் கூட்டங்கள் நடத்தப்பட்டு **2,043** தணிக்கை மறுப்புரைகள் மீது முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன.

38. பேரூராட்சிகளைப் பொறுத்தமட்டில் மாநில அளவில் பேரூராட்சிகளின் இயக்குநரை தலைவராகக் கொண்டும், மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சியரைத் தலைவராகக் கொண்டும் பேரூராட்சிகளுக்கான உயர்நிலைக் குழுக்களை அமைக்க அரசாணை (நிலை) எண்.**1**, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (பேரூராட்சிகள்–**2**) துறை, நாள் **04.01.2007–**ல் ஆணையிடப்பட்டுள்ளன. இவ்வாறு பேரூராட்சிகளுக்கான உயர்நிலைக் குழுக்கள்

அமைக்கப்பட்டதால், பேரூராட்சிகளின் தணிக்கைத் மறுப்புரை நிலுவைகள் கணிசமான அளவிற்கு குறைக்கப்பட்டுள்ளன. 2011–ஆம் ஆண்டில், 20 மாவட்ட உயர் நிலைக் குழுக் கூட்டங்கள் நடத்தப்பட்டு 854 எண்ணிக்கையிலான தணிக்கை மறுப்புரைகளின் மீது முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன.

39. சென்னை மாநகராட்சி தவிர, அனைத்து மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளுக்கான மாவட்ட அளவிலான உயர் நிலைக் குழு, நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலக நிதி ஆலோசகரை தலைவராகக் கொண்டும், அதன் பின்னர் மாநில அளவிலான உயர்மட்டக் குழு நகராட்சி நிர்வாக ஆணையரைத் தலைவராகக் கொண்டும், அரசாணை (நிலை) எண்.65, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 22.05.2007ன்படி அமைக்கப்பட்டுள்ளது. 2011–ஆம் ஆண்டில், மாவட்ட அளவிலான 9 உயர் நிலைக் குழுக் கூட்டங்கள் நடத்தப்பட்டு 1693 தணிக்கை மறுப்புரைகளின் மீது முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன.

40. நகர்ப்புற உள்ளாட்சி நிறுவனங்கள் மற்றும் ஊராட்சி அமைப்புகளிலிருந்த தணிக்கை மறுப்புரை நிலுவைகளைத் தீர்வு செய்ய, மாவட்ட அளவிலான உயர்நிலைக்குழுக்கள் மற்றும் மாநில அளவிலான உயர்மட்டக் குழு நாட்டிலேயே முதன்மையாய் அமைத்ததின் மூலம் நகர்ப்புற உள்ளாட்சி நிறுவனங்கள் மற்றும் ஊராட்சி அமைப்புகளில் இத்துறையில் எழுப்பப்படும் தணிக்கை மறுப்புரை நிலுவைகளைத் தீர்வு செய்ய இதுபோன்ற குழுக்களை அமைத்த முதல் மாநிலம் தமிழ்நாடு என்ற பெருமையை ஈட்டியுள்ளது.

**நிருவாகத் துறையும் தணிக்கைத் துறையும் இணைந்து நடத்தும் ஆய்வுக் கூட்டங்கள்**

**41.** அந்தந்த மாவட்ட, மண்டல மற்றும் மாநில அளவில் நிருவாகம் மற்றும் தணிக்கை அலுவலர்களின் கூட்டு ஆய்வுக் கூட்டம் நிருவாகம் மற்றும் தணிக்கை அலுவலர்களுடன் நடத்தப்படுவதால், நகர்ப்புற உள்ளாட்சி நிறுவனங்கள் மற்றும் ஊராட்சி அமைப்புகளின் கணக்குகள் மற்றும் தணிக்கை தொடர்பான பிரச்சினைகளை, ஆரம்ப நிலையிலேயே களைய வழி ஏற்பட்டுள்ளது. இவ்வாறே இறுதி விவாதம் மற்றும்

தணிக்கை அறிக்கை ஒப்புதல் ஆகியவற்றின்போது தொடர்புடைய நிறுவனங்களின் செயல்நிலை அலுவலர்களோடு நிர்வாகத்தின் உயர்நிலை அலுவலர்களும் பங்கு பெறுகின்றனர். இதனால் தணிக்கையின் போது சுட்டிக்காட்டப்படும் தவறுகளை உடனுக்குடன் சரி செய்து கொள்ளவும் ஏதுவாகிறது.

**மானியங்கள் பயன்படுத்தப்பட்டதற்கான பயன்பாட்டுச் சான்றிதழ் அளித்தல்**

**42.** மாநில / மத்திய அரசு, பல்கலைக் கழக மானியக்குழு மற்றும் இதர நிதி உதவி அளிக்கும் நிறுவனங்களால் பல்கலைக் கழகங்களுக்கு வழங்கப்படும் நிதியுதவிகள் மற்றும் இத்துறையின் தணிக்கை வரம்பிற்குட்பட்ட இதர உள்ளாட்சி நிறுவனங்களுக்கு வழங்கப்படும் மானியங்கள் பயன்படுத்தியதற்கு இத்துறையினால் தணிக்கைச் சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன. உள்ளாட்சி நிறுவனங்கள் மற்றும் பல்கலைக் கழகங்களால் நிறைவேற்றப்படும் திட்டப்பணிகளுக்கும் பயனீட்டுச் சான்றிதழ் உடனே வழங்கப்படுகிறது.

**சிறப்புப் பணிகள்**

**43.** வழக்கமான தணிக்கைப் பணிகள் தவிர, கீழ்க்காணும் சிறப்புப் பணிகளும் இத்துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. அவையாவன:–

- ❖ நகராட்சி, ஊராட்சி ஒன்றியம் மற்றும் பேரூராட்சி ஆகியவற்றில் ஓய்வு பெற்ற பணியாளர்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தினருக்கு ஓய்வூதியப் பயன்கள் மற்றும் மாதாந்திர ஓய்வூதியம் வழங்கிட சான்றளித்தல்
- ❖ மாநகராட்சி மற்றும் பல்கலைக் கழகங்களின் ஓய்வுபெற்ற பணியாளர்களுக்கு ஓய்வூதியச் சான்றளித்தல்
- ❖ நகராட்சி ஓய்வூதியதாரர்களுக்கான மருத்துவ நல நிதி திட்டத்தின் கீழ் உதவித் தொகை ஒப்பளிப்பு செய்து வழங்குதல்
- ❖ நகராட்சி ஓய்வூதியதாரர்களுக்கான குடும்ப பாதுகாப்பு நிதித் திட்டத்தின் கீழ் உதவி தொகை ஒப்பளிப்பு செய்து வழங்குதல்
- ❖ நகர்ப்புற மற்றும் கிராமப்புற உள்ளாட்சி அமைப்புகளின் கருவூல வைப்பு இருப்புக்கு சேமநல நிதி வட்டி ஒப்பளித்தல்

❖ அறக்கட்டளைகளுக்கான பொருளாளராகப் பணியாற்றுதல்

**உள்ளாட்சி அமைப்புகளின் பணியாளர்களுக்கு ஓய்வூதியப் பயன்களுக்கு ஒப்பளிப்பு அளித்து தொகை வழங்குதல்**

44. உள்ளாட்சி அமைப்புகளின் பணியாளர்களின் ஓய்வூதிய / குடும்ப ஓய்வூதியப் பயன்களுக்கு சான்று / ஒப்பளிப்பு மற்றும் தொகை வழங்குதல் போன்ற பணிகள் உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்ககத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. **31.03.2012** அன்று நிலவரப்படி **34,504** ஓய்வூதியதாரர்கள், நான்கு தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் மூலம் மாதாந்திர ஓய்வூதியம் பெறுகின்றனர்.

**நகராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் பேரூராட்சி ஓய்வூதியர்களின் ஓய்வூதிய நிதிகள் பராமரிப்பு**

**45.** நகராட்சி நிர்வாக இயக்குநர், பேரூராட்சிகளின் இயக்குநர் மற்றும் ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்துராஜ் ஆணையரால் மாத ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம் வழங்கிட விடுவிக்கப்படும் தொடர்புடைய ஓய்வூதிய நிதிக்கான தொகை இத்துறையில் பராமரிக்கப்பட்டு வருகிறது.

**உள்ளாட்சி அமைப்புகளின் ஓய்வூதியதாரர்கள் குறைகளை தீர்த்தல்**

**46.** உள்ளாட்சி அமைப்பு ஓய்வூதியதாரர்கள் / குடும்ப ஓய்வூதியதாரர்கள் தங்கள் ஓய்வூதியம் / குடும்ப ஓய்வூதியம் தொடர்பான குறைகளை களைவதற்குத் தேவைப்படும் விவரங்களைக் காலதாமதம் இன்றி உடனே பெற்றுக்கொள்வதற்காக உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்ககத்தில் தகவல் மையம் ஒன்று தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

**நகராட்சி ஓய்வூதியதாரர்கள் நலன் மற்றும் குடும்ப பாதுகாப்பு நிதித் திட்டத்தை நிருவகித்தல்**

**47.** அரசு ஓய்வூதியதாரர்களுக்கு பொருந்தக்கூடிய நல நிதித் திட்டம் மற்றும் குடும்ப பாதுகாப்பு நிதித் திட்டத்தின் சலுகைகள் மற்றும் பலன்கள் அரசாணை (நிலை) எண்.120, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் **25.05.1999** இன்படி, **01.08.1999** முதல் நகராட்சி ஓய்வூதியதாரர்களுக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது. இந்த இரண்டு நலத் திட்டங்களும் உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்குநரால்

நிருவகிக்கப்பட்டு வருகின்றன. இத்திட்டங்களின் கீழ் 2011–2012ஆம் ஆண்டில் கீழ்க்கண்டபடி கோரிக்கைகள் ஏற்கப்பட்டு தொகை அனுமதிக்கப்பட்டுள்ளது.

| நல நிதித் திட்டம் | | குடும்ப பாதுகாப்பு நிதித் திட்டம் | |
|---|---|---|---|
| **கோரிக்கைகளின் எண்ணிக்கை** | **தொகை (ரூபாய் இலட்சத்தில்)** | **கோரிக்கைகளின் எண்ணிக்கை** | **தொகை (ரூபாய் இலட்சத்தில்)** |
| **347** | **71.61** | **306** | **74.86** |

**உள்ளாட்சி அமைப்புகளின் பணியாளர்கள் வருங்கால வைப்பு நிதி இருப்புத் தொகைகளுக்கு வட்டி அளித்தல்**

48. உள்ளாட்சி அமைப்பின் பணியாளர்களின் வருங்கால வைப்பு நிதியும் அவற்றின் முதலீடுகளும் அரசால் 1967ம் ஆண்டு முதல் ஏற்கப்பட்டன. அப்பணியாளர்களின் வருங்கால வைப்பு நிதிக் கணக்குகளின் இருப்புகளுக்கு வட்டி வழங்குவதற்கு உள்ளாட்சி நிதித் தணிக்கை துறை இயக்குநருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. 2011–2012 ஆம் ஆண்டில் ரூ.19.34 கோடி தொகை அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்டு, உள்ளாட்சி அமைப்புகளிடமிருந்து பெறப்பட்ட

கோரிக்கைகளின் அடிப்படையில் அத்தொகை முழுவதும் உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஒப்பளிப்பு செய்யப்பட்டது.

**அறக்கட்டளைகளின் பொருளாளர்**

49. உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்குநர், **01.04.1952** முதல் அறக்கட்டளைகளின் பொருளாளராகவும் செயல்பட்டு வருகிறார். அறக்கட்டளைகளை அரசு ஏற்று அறக்கட்டளைகளின் நிருவாகத் திட்டங்களை அரசிதழில் வெளியிடுகிறது.

50. நிறுவன அமைப்புகளிடமிருந்து பெறப்பட்ட வேண்டுகோள்களின் அடிப்படையில் அறக்கொடைகளிடமிருந்து பெறப்படும் வட்டித் தொகை அந்தந்த நிறுவனங்களுக்கு அளிக்கப்படுகிறது. தற்போது அறக்கட்டளை நிதிப் பொருளாளர் என்ற தகுதியின் அடிப்படையில் உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை இயக்குநரின் கட்டுப்பாட்டில் ரூபாய் **10.60** இலட்சம் மதிப்புள்ள மத்திய அரசின் **4** அறக்கட்டளைகளும், ரூபாய் **16.64** கோடி மதிப்புள்ள மாநில அரசின் **869** அறக்கட்டளைகளும் உள்ளன. அறக்கட்டளைகளிடமிருந்து கிடைக்கப் பெற்ற வருமானத்தில் **2011–2012** ஆம் ஆண்டில்

278 பயனாளிகளுக்கு ரூ.8.67 இலட்சம் உதவித் தொகையாகவும், பரிசுகளாகவும், பதக்கங்களாகவும் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது.

**துறைப் பணியாளர்களின் தணிக்கைத் திறன் மேம்பாடு**

51. தணிக்கைப் பணியாளர்களின் செயல்திறனை உயர்த்தி தணிக்கையின் தரத்தினை மேம்படுத்திட வேண்டி இத்துறையின் அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு பல்வேறு பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன. இத்துறையின் தணிக்கையாளர்களுக்கு துறையின் மூத்த அலுவலர்களை கொண்டும், தமிழ்நாடு மாநில கணக்காயரைக் கொண்டும் தணிக்கைப் பயிற்சியும் அளிக்கப்பட்டு வருகிறது.

**தணிக்கைக் கட்டணம்**

52. பல்கலைக் கழகத் தணிக்கைக்கு 100 சதவீதம் தணிக்கைச் செலவினம் தணிக்கைக் கட்டணமாகவும், மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் விற்பனைக் குழுக்கள் தணிக்கைக்கு 50 சதவீதம் தணிக்கைச் செலவினம் தணிக்கைக் கட்டணமாகவும் இத்துறையால் வசூலிக்கப்படுகிறது. 2011–2012 ஆம் ஆண்டில் ரூ.5.97 கோடி தணிக்கைக் கட்டணமாக வசூலிக்கப்பட்டுள்ளது.

# கூட்டுறவு தணிக்கைத் துறை

**53.** கூட்டுறவு தணிக்கைத் துறை, கூட்டுறவுத் துறையிலிருந்து பிரிக்கப்பட்டு 17.06.1981 முதல் தனியாகச் செயல்பட்டு வருகிறது. தமிழ்நாடு 1983ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் 80 வது பிரிவின்படி பன்மாநிலக் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் பால் கூட்டுறவுச் சங்கங்கள் தவிர 14 நிருவாகப் பதிவாளர்களின் கீழ் இயங்கும் அனைத்து கூட்டுறவுச் சங்கங்களின் தணிக்கையை மேற்கொள்வதே இத்துறையின் முக்கியமான பணியாகும்.

**54.** கீழ்க்காணும் துறைகளின் கட்டுப்பாட்டிலுள்ள கூட்டுறவுச் சங்கங்கள் கூட்டுறவு தணிக்கைத்துறையின் அதிகார வரம்பிற்கு உட்பட்டவையாகும்.

| **வரிசை எண்.** | **நிருவாகப் பதிவாளரின் பெயர்** | **கூட்டுறவுச் சங்கங்களின் மொத்த எண்ணிக்கை** |
|---|---|---|
| (i) | கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் | 10,511 |
| (ii) | கைத்தறி மற்றும் துணி நூல் ஆணையர் | 1,441 |
| (iii) | தொழில் மற்றும் வணிகத் துறை ஆணையர் | 347 |

| வரிசை எண். | நிருவாகப் பதிவாளரின் பெயர் | கூட்டுறவுச் சங்கங்களின் மொத்த எண்ணிக்கை |
|---|---|---|
| (iv) | தலைமைச் செயல் அலுவலர், தமிழ்நாடு கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியம். | 1,543 |
| (v) | தலைமைச் செயல் அலுவலர், பனைப்பொருள் வளர்ச்சி வாரியம் | |
| (vi) | கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் (வீட்டு வசதி) | 958 |
| (vii) | மீன் வளத் துறை இயக்குநர் | 1,274 |
| (viii) | கால்நடைப் பராமரிப்பு மற்றும் மருத்துவப் பணிகள் ஆணையர் | 282 |
| (ix) | சர்க்கரைத் துறை ஆணையர் | 17 |
| (x) | வேளாண்மைத் துறை இயக்குநர் (எண்ணெய் வித்துக்கள்) | 235 |
| (xi) | வேளாண் பொறியியல் மற்றும் சேவை கூட்டுறவு சங்கங்களின் இயக்குநர் | 215 |
| (xii) | பட்டுப் புழு வளர்ப்புத் துறை இயக்குநர் | 37 |
| (xiii) | சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை இயக்குநர் | 124 |
| (xiv) | ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்துராஜ் ஆணையர் | 45 |
| | **மொத்தம்** | **17,029** |

**கூட்டுறவு தணிக்கைத் துறையின் நோக்கம்**

**55.** கூட்டுறவுச் சங்கங்களின் கணக்குகளை சரிபார்த்தலும், அக்கணக்குகள் சங்கங்களின் உண்மையான மற்றும் தெளிவான நிலவரத்தைப் பிரதிபலிக்கும் வகையில் தயாரிக்கப்படுவதை உறுதிபடுத்துவதும் கூட்டுறவுத் தணிக்கைத் துறையின் அடிப்படை நோக்கமாகும். கூட்டுறவுச் சங்கங்களின் நடவடிக்கைகள், அதற்கான சட்டம், விதி, நடைமுறைகள் ஆகியவற்றின்படி செயல்படுவதைக் கண்காணிக்க சங்க உறுப்பினர்களுக்கு கூட்டுறவு தணிக்கை முக்கிய கருவியாக உள்ளது. அரசின் நிதியுதவி எதற்காக வழங்கப்பட்டதோ அந்த நோக்கத்திற்காகவே செலவிடப்பட்டு உறுப்பினர்களும், சமுதாயமும் முழுமையாகப் பயன் அடைந்துள்ளனர் என்பதையும் உறுதி செய்கிறது.

**இத்துறையில், கீழ்க்கண்ட வகையான தணிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.**

**சங்கங்களின் தணிக்கைக் கட்டணம் வசூல்**

**56.** இத்தணிக்கை, **45** நாட்களுக்குள் இறுதித் தணிக்கையை முடிக்க இயலும் வகையிலான சிறிய

கூட்டுறவுச் சங்கங்களில் மேற்கொள்ளப்படும் தணிக்கை ஆகும். இத்தணிக்கையை மேற்கொள்ளும் தணிக்கையாளரின் பணி நிலை மற்றும் சம்பந்தப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களின் கணக்குகளை தணிக்கை செய்வதற்கு எடுத்துக் கொள்ளப்படும் நேரம் ஆகியவற்றின் அடிப்படையில் தணிக்கைக் கட்டணம் வசூலிக்கப்படுகின்றது. **2011–2012** ஆம் ஆண்டில் தணிக்கைக் கட்டணமாக ரூபாய் **1.62** கோடி வசூல் செய்யப்பட்டுள்ளது.

**அடிப்படை விதி 127–இன்கீழ் இயங்கும் சங்கங்களின் அடிப்படை விதிக் கட்டணம் வசூல்**

**57.** பல்முனை செயல்பாடுகளுடன் கூடிய அதிக அளவு வணிக நடவடிக்கைகளைக் கொண்டுள்ள பெரிய அளவிலான கூட்டுறவு நிறுவனங்களில் அடிப்படை விதி **127–**இன் கீழ் தணிக்கை செய்யப்படுகிறது. உருவாக்கப்பட்ட பணியிடங்களுக்கேற்ப தணிக்கையாளர்களால் தணிக்கை செய்யப்படுகிறது. அதற்கான நிருவாகச் செலவுகள் சங்கங்களிடமிருந்து வசூலிக்கப்படுகிறது. அடிப்படை விதி தணிக்கைக் கட்டணமாக **60** சதவீதம் நிர்ணயம் செய்து

சங்கங்களிடமிருந்து அரசு வசூலிக்கிறது. 2011–2012 ஆம் ஆண்டில் அடிப்படை விதி தணிக்கைக் கட்டணமாக ரூபாய் 8.90 கோடி வசூல் செய்யப்பட்டுள்ளது.

**நகர வங்கிகள் மற்றும் மத்தியக் கூட்டுறவு வங்கிகளில் உடன் தணிக்கை மேற்கொள்ளுதல்**

58. இதுநாள்வரையில் மத்திய கூட்டுறவு வங்கிகள் மற்றும் நகரக் கூட்டுறவு வங்கிகள் சட்டப்பூர்வமான தணிக்கையை, இத்துறையின் தணிக்கையாளரால் செய்யப்பட்டு வந்தது. தற்போது, முனைவர் வைத்தியநாதன் கமிட்டியின் பரிந்துரையின் பேரில் மத்தியக் கூட்டுறவு வங்கிகள் மற்றும் இந்திய சேம வங்கியின் பரிந்துரைப்படி ரூபாய் 25 கோடிக்கு மேல் வைப்பீட்டுத் தொகைகளைக் கொண்டுள்ள நகரக் கூட்டுறவு வங்கிகளின் சட்டப்பூர்வ தணிக்கைகள் 2009 மற்றும் 2010 ஆம் ஆண்டுகள் முதல் முறையே, பட்டயக் கணக்கர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இத்துறையைச் சேர்ந்த தணிக்கையாளர்களுக்கு மேற்சொன்ன வங்கிகளின் உடன் தணிக்கைப் பணிகள் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

**சிறப்பு அறிக்கைகள்**

**59.** தணிக்கையின்போது, கடுங்குறைகள் கண்டறியப்படுமாயின் அது தொடர்பான அனைத்து விவரங்களும் அடங்கிய சிறப்பு அறிக்கைகள் மூலம் சம்பந்தப்பட்ட நிருவாக அலுவலர்களுக்கு உடனே தெரிவிக்கப்படுகிறது. **2011–2012–**ஆம் ஆண்டில் ரூ.**109.80** கோடி சம்பந்தப்பட்ட **258** சிறப்பு அறிக்கைகள் பெறப்பட்டுள்ளன.

**தணிக்கையின் தரத்தை மேம்படுத்துவதற்கான பயிற்சி**

**60.** தணிக்கையாளர்களின் திறமையையும் தணிக்கையின் தரத்தையும் மேம்படுத்துவதற்காக, பல்வேறு வகையான பயிற்சிகளும், பலதரப்பட்ட கூட்டுறவு சங்கங்களில் தணிக்கை செய்யும்போது பின்பற்றக்கூடிய விதிகள், அடிப்படை கொள்கைகள், வழிகாட்டுதல்கள் ஆகியவற்றைக் கொண்ட புத்தாக்கப் பயிற்சிகள் வருடந்தோறும் அளிக்கப்பட்டு வருகிறது. **2011–2012–**ஆம் ஆண்டில் **5** பல்வேறு பயிற்சியின் மூலமாக **215** அலுவலர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது.

# சிறுசேமிப்புத் துறை

**61.** மத்திய அரசின் நிதித் துறையினால் உருவாக்கப்பட்டு அஞ்சலகங்கள் மூலமாக சிறுசேமிப்புத் திட்டங்கள் செயல்படுத்தப்படுகிறது. மாநிலத்தில் திரட்டப்படும் சிறுசேமிப்பு முதலீடுகளில் **50%** அந்தந்த மாநிலத்திற்கே நீண்டகால கடனாக மத்திய அரசால் வழங்கப்படுகிறது. **01.12.2011** முதல் அத்தகைய கடனுக்கான வட்டி விகிதம் **9.5** சதவீதம் ஆகும். சிறு சேமிப்புத் திட்டங்கள் பொது மக்களுக்கு பாதுகாப்பான மற்றும் அதிக வருவாய் தரும் முதலீட்டினை ஏற்படுத்துவதுடன், வளர்ச்சித் திட்டங்களுக்கான நிதியினை திரட்டுவதற்கும் வழிவகை செய்கிறது.

## சிறு சேமிப்புத் திட்டங்கள்

**62.** சமுதாயத்தின் பல்வேறு பிரிவினருக்கும் பயனளிக்கும் வகையில் பல சிறுசேமிப்புத் திட்டங்கள் நடைமுறையில் உள்ளன. **01.04.2012** முதல் மத்திய அரசு சிறுசேமிப்புத் திட்டங்களின் வட்டி விகிதங்களை கீழ்க்கண்டவாறு மாற்றி அமைத்துள்ளது.

| வ. எண் | திட்ட விவரம் | 30.11.2011 வரையிலான காலத்திற்கு வட்டி சதவீதம் | 01.12.2011 முதல் வட்டி சதவீதம் | 01.04.2012 முதல் வட்டி சதவீதம் |
|---|---|---|---|---|
| (i) | அஞ்சலக சேமிப்பு கணக்கு (POSA) | 3.50 | 4.0 | 4.0 |
| (ii) | **கால வைப்பீடு** | | | |
| | 1 ஆண்டு அஞ்சலக கால வைப்பு நிதி (POTD) | 6.25 | 7.7 | 8.2 |
| | 2 ஆண்டு அஞ்சலக கால வைப்பு நிதி (POTD) | 6.50 | 7.8 | 8.3 |
| | 3 ஆண்டு அஞ்சலக கால வைப்பு நிதி (POTD) | 7.25 | 8.0 | 8.4 |
| | 5 ஆண்டு அஞ்சலக கால வைப்பு நிதி (POTD) | 7.50 | 8.3 | 8.5 |
| (iii) | அஞ்சலக தொடர் வைப்புத் திட்டம் (PORD) | 7.50 | 8.0 | 8.4 |
| (iv) | 5 ஆண்டு மூத்த குடிமக்கள் சேமிப்புத் திட்டம் (SCSS) | 9.00 | 9.0 | 9.3 |

| வ. எண் | திட்ட விவரம் | 30.11.2011 வரையிலான காலத்திற்கு வட்டி சதவீதம் | 01.12.2011 முதல் வட்டி சதவீதம் | 01.04.2012 முதல் வட்டி சதவீதம் |
|---|---|---|---|---|
| (v) | அஞ்சலக மாதாந்திர வருவாய்த் திட்டம் (POMIS) | 8.00 + 5 % போனஸ் (6 வருடம்) | 8.2 (5 வருடம்) (போனஸ் இல்லை) | 8.5 (5 வருடம்) (போனஸ் இல்லை) |
| (vi) | தேசிய சேமிப்புப் பத்திரம் (NSC- VIIIவது வெளியீடு) | 8.00 (6 வருடம்) | 8.4 (5 வருடம்) | 8.6 (5 வருடம்) |
| (vii) | 10 ஆண்டு தேசிய சேமிப்புப் பத்திரம் (NSC-IXவது வெளியீடு) | புதிய திட்டம் | 8.7 | 8.9 |
| (viii) | 15 ஆண்டு பொது சேமநல நிதித் திட்டம் (PPF) | 8.00 (ஓராண்டுக்கு அதிகபட்ச முதலீடு ரூ.70,000) | 8.6 (ஓராண்டுக்கு அதிகபட்ச முதலீடு ரூ.1,00,000) | 8.8 (ஓராண்டுக்கு அதிகபட்ச முதலீடு ரூ.1,00,000) |
| (ix) | கிஸான் விகாஸ் பத்திரம் (KVP) | 01.12.2011 முதல் நடைமுறையில் இல்லை | | |

**சிறுசேமிப்பு வசூல்**

**63.** கடந்த ஏழு வருடங்களாக சிறுசேமிப்பில் தமிழகத்தில் திரட்டப்பட்ட வசூல் விவரங்கள் கீழ்க்கண்டவாறு :–

(ரூபாய் கோடியில்)

| வ. எண். | ஆண்டு | நிகர இலக்கு | மொத்த வசூல் | நிகர வசூல் |
|---|---|---|---|---|
| (i) | 2005–2006 | 5000.00 | 12455.75 | 5594.13 |
| (ii) | 2006–2007 | 5700.00 | 10158.54 | 2637.25 |
| (iii) | 2007–2008* | -- | 7791.11 | –965.98 |
| (iv) | 2008–2009 | -- | 8486.64 | –1216.73 |
| (v) | 2009–2010 | -- | 12113.39 | 1539.39 |
| (vi) | 2010–2011 | -- | 13414.56 | 516.32 |
| (vii) | 2011–2012 (தற்காலிகம்) | -- | 10518.11 | –2058.64 |

* (2007–08 முதல் சிறுசேமிப்பு வசூலுக்கு தமிழக அரசு இலக்கு நிர்ணயிக்கவில்லை.)

**64.** தமிழகமெங்கும் சிறுசேமிப்புத் திட்டங்களை ஊக்கப்படுத்துவதிலும், சிறுசேமிப்பு முகவர்கள் மற்றும்

முதலீட்டாளர்களின் நலனை பேணுவதிலும் சிறுசேமிப்பு இயக்குநர் முக்கிய பங்கு வகிக்கிறார். மாவட்டங்களில் மாவட்ட ஆட்சியர்களும், சென்னையை பொருத்தவரை மாநகராட்சி ஆணையாளரும் சிறுசேமிப்புத் திட்டங்களை மக்களிடையே கொண்டு செல்வதில் முக்கிய பங்கு வகிக்கின்றனர்.

## முகவர்களுக்கான தரகுத் தொகை மற்றும் ஊக்கத் தொகை

**65.** சிறுசேமிப்புத் தொகையைத் திரட்டுவதற்கு மாநிலம் முழுவதிலும் முகவர்கள் நியமிக்கப்படுகிறார்கள். இவர்கள் சிறுசேமிப்புத் திட்டத்தை ஊக்குவிப்பதிலும், வசூல் பணிகளிலும் முக்கிய பங்கு வகிக்கின்றனர். தற்பொழுது, தமிழ்நாடு முழுவதும் மொத்தம் **31,620** முகவர்கள் பணிபுரிகிறார்கள். முகவர்கள் திரட்டும் முதலீடுகளுக்காக, அவர்களுக்குக் கீழ்க்காணும் வீதத்தில் மத்திய அரசு மற்றும் மாநில அரசால் தரகு மற்றும் ஊக்கத் தொகை வழங்கப்படுகிறது. மத்திய அரசு **01.12.2011** முதல் தரகுத் தொகை விகிதங்களை மாற்றி அமைத்துள்ளது.

| வ. எண் | முகவரமைப்பு வகை | சேமிப்புத் திட்டங்கள் | முகவர்களின் எண்ணிக்கை | மத்திய அரசின் தரகு தொகை | | மாநில அரசின் ஊக்கத் தொகை (31.3.12 வரை) |
|---|---|---|---|---|---|---|
| | | | | (30.11.2011 வரை) | (01.12.2011 முதல்) | |
| (i) | நிலைப்படுத்தப்பட்ட முகவரமைப்புத் திட்டம் | அஞ்சலக மாத வருவாய் திட்டம்/ தேசிய சேமிப்பு பத்திரம்/ அஞ்சலக குறித்த கால வைப்புத் திட்டம் (1, 2, 3, 5 வருடங்கள்) | 7507 | 1% | 0.5% | 0.5% |
| (ii) | மகளிர் முகவர் திட்டம் (தொடர் வைப்புத் திட்டம்) | அஞ்சலக தொடர் சேமிப்புத் திட்டம் | 23489 | 4% | 4% | 2% |
| (iii) | பொது வருங்கால வைப்பு நிதி முகவர் திட்டம் | பொது வருங்கால வைப்பு நிதித் திட்டம் | 624 | 1% | இல்லை | இல்லை |
| (iv) | மூத்த குடிமக்கள் சேமிப்புத் திட்டம் | மூத்த குடிமக்கள் சேமிப்புத் திட்டம் | -- | 0.5% | இல்லை | இல்லை |
| | **மொத்தம்** | | **31620** | | | |

**66.** **01.12.2011** முதல் மாநில அரசுகள் முகவர்களுக்கு ஊக்கத் தொகை வழங்குவதற்கு மைய

அரசு கட்டுப்பாடுகள் நிர்ணயித்திருந்தாலும், **31.03.2012** வரை ஏற்கெனவே வழங்கப்பட்டிருந்த ஊக்கத் தொகையை வழங்க மாநில அரசு உத்திரவிட்டுள்ளது. இருப்பினும் சிறுசேமிப்பு முகவர்களின் நலனை பாதுகாத்திடும் பொருட்டு மத்திய அரசால் ஏற்கெனவே வழங்கப்பட்டு வந்த தரகுத் தொகையை மீண்டும் தொடர்ந்து வழங்கிட மத்திய அரசை தமிழ்நாடு அரசு கேட்டுக் கொண்டுள்ளது.

67. முகவர்கள் திரட்டும் முதலீடுகளுக்காக, மாநில அரசால் ஊக்கத் தொகை வழங்கப்படுகிறது. கடந்த ஆண்டுகளில் முகவர்களுக்கு கீழ்க்கண்டவாறு மாநில அரசால் ஊக்கத் தொகை வழங்கப்பட்டுள்ளது.

**(ரூபாய் கோடியில்)**

| **வருடம்** | **வழங்கப்பட்ட ஊக்கத்தொகை** |
|---|---|
| 2005–2006 | 70 |
| 2006–2007 | 45 |
| 2007–2008 | 32 |
| 2008–2009 | 25 |
| 2009–2010 | 25 |
| 2010–2011 | 40 |
| 2011–2012 | 40 |

**விளம்பரம்**

**68.** மக்களிடையே சிக்கன உணர்வினை உண்டாக்கவும், சேமிக்கும் பழக்கத்தை வளர்த்திடவும், ஆண்டுதோறும் உலக சிக்கன நாள் விழா அக்டோபர் **30**ஆம் தேதியன்று சென்னையிலும், மாவட்டத் தலைநகரங்களிலும் கொண்டாடப்படுகிறது. பள்ளியில் பயிலும் மாணவ / மாணவியர்களுக்கு சிறுவயதிலேயே சிக்கன உணர்வும், சேமிக்கும் பண்பும் பெற்றிடும் வகையில் பேச்சுப் போட்டி, கட்டுரைப் போட்டி, நாடக போட்டி, நடனப் போட்டிகள் நடத்தி பரிசுகளும், சான்றிதழ்களும் உலக சிக்கன நாள் விழாவில் வழங்கப்படுகிறது.

**69.** அரசு நடத்தும் பொருட்காட்சிகளில் சிறுசேமிப்பு அரங்கு அமைத்து, பொதுமக்களுக்கு துண்டு பிரசுரங்கள் வழங்கி விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுகிறது. அதே போல மாவட்ட அளவில் பொருட்காட்சிகளில் சிறுசேமிப்பு அரங்குகள் அமைத்து பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுகிறது. அனைத்து மாவட்டங்களுக்கும் 42" திரவ படிக டிஸ்ப்ளே (உயர் வரையறை) (LCD) தொலைக்காட்சி பெட்டி, டிவிடி

ப்ளேயர், மீடியா ப்ளேயர் வழங்கப்பட்டுள்ளது. அதிநவீன முறையில் சிறுசேமிப்பு விளம்பரங்களுடன் கூடிய குறும்படங்கள், சிறுசேமிப்பு பிரச்சாரத்திற்காக அனைத்து மாவட்டங்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது. சென்னை, மதுரை, கோவை, திருச்சி மற்றும் திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களுக்கு அகன்ற திரை மூலம் குறும்படங்கள் காண்பிக்க புரொஜக்டர்கள் வழங்கப்பட்டுள்ளது.

**வெகுமதிகள்**

**70.** சிறுசேமிப்புத் திட்டத்தை ஊக்குவிக்கும் பொருட்டு ஒன்றிய, மாவட்ட மற்றும் மாநில அளவில் சிறுசேமிப்பில் சிறந்து விளங்கும் மகளிர் முகவர்கள் (MPKBY), மாவட்டம் மற்றும் மாநில அளவில் சிறந்து விளங்கும் சம்பளப் பட்டியல் சேமிப்பு திட்டக் குழு தலைவர்கள் (PRSS) மற்றும் நிலை முகவர்கள் (SAS) ஆகியோருக்கு வெகுமதிகள் ஒவ்வொரு ஆண்டும் வழங்கப்படுகிறது.

# அரசுத் தகவல் தொகுப்பு விவர மையம்

71. மாநில அரசின் நிதி ஒதுக்கீட்டுக் கணக்குகளின் செயல்பாட்டினை மின்னணு தகவல் தொகுப்பு உபகரணம் மூலம் சீராய்வு செய்வதற்கும் சிறந்த வரவு செலவுத் திட்டத்தினை உருவாக்கவும் 1971–ஆம் ஆண்டு மத்திய வரவு செலவு திட்ட விவரங்கள் தொகுப்பு மையம் ஒன்றிற்கு தமிழக அரசு ஒப்பளிப்பு வழங்கியது. இந்த உபகரணங்களை பயன்படுத்தி அரசு துறைகளின் பலதரப்பட்ட செயல்பாட்டுத் தேவைகளை தொகுக்கும் வகையில், அரசுத் தகவல் தொகுப்பு விவர மையம் 1972ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. நிருவாக வசதிகளுக்காக 1975ஆம் ஆண்டு மேற்கண்ட இரண்டு பிரிவுகளும் ஒருங்கிணைக்கப்பட்டு அரசுத் தகவல் தொகுப்பு விவர மையம் ஏற்படுத்தப்பட்டது. தற்போது இந்த மையம் கீழ்க்கண்ட பணிகளை மேற்கொண்டு வருகிறது:

(i) அரசுத் தேர்வுகள் இயக்ககத்தினால் நடத்தப்படும் தேர்வு முடிவுகளை வெளியிடும் பணிகள்

(ii) ஆசிரியர்களின் வருங்கால வைப்பு நிதி

(iii) பங்களிப்புடன் கூடிய ஓய்வூதியத் திட்டம்

(iv) தமிழ்நாடு சத்துணவு மற்றும் ஒருங்கிணைந்த குழந்தைகள் மேம்பாட்டுத் திட்ட பணியாளர்களின் பொது வருங்கால வைப்பு நிதி

**தேர்வுப் பணிகள்**

**72.** அரசுத் தேர்வுகள் இயக்ககத்தினால் நடத்தப்படும் தேர்வுகளை தொகுக்கும் பணிகள் அரசுத் தகவல் தொகுப்பு விவர மையத்திடம் அரசு ஆணை **(1** ப) எண்.**324**, பள்ளிக் கல்வித் துறை, நாள்.**15.10.2010**–ன்படி ஒப்படைக்கப்பட்டுள்ளது.

**73.** அரசுத் தகவல் தொகுப்பு விவர மையம், அரசுத் தேர்வுகள் இயக்ககத்தினால் நடத்தப்படும் பலதரப்பட்ட தேர்வுகளின் முடிவுகளை வெளியிடும் பணியை மிகுந்த கவனத்துடனும், துல்லியமாகவும் மேற்கொண்டு வருகிறது. அத்தகைய பணிகளின் விபரம் பின்வருமாறு:

அ) மேல்நிலைப் பள்ளி தேர்வு

ஆ) பத்தாம் வகுப்பு தேர்வு

இ) மெட்ரிகுலேசன் தேர்வு

ஈ) ஆங்கிலோ இந்தியத் தேர்வு

உ) எட்டாம் வகுப்பு தேர்வு

ஊ) கீழ்த்திசைப் பள்ளி வகுப்புச் சான்றிதழ்

எ) ஊரக திறனாய்வுத் தேர்வு

ஏ) ஆசிரியர் கல்வி பட்டயப் படிப்பு தேர்வு

ஐ) தேசிய திறனாய்வு தேர்வு

ஒ) தேசிய வழி மற்றும் திறன்படிப்பு உதவித் தொகை திட்டத் தேர்வு

ஓ) தொழில் நுட்பத் தேர்வு

74. ஒவ்வொரு ஆண்டும், அரசுத் தகவல் தொகுப்பு விவர மையம் சுமார் 25 இலட்சம் மாணவர்களின் தேர்வு முடிவுகளை மிகுந்த கவனத்துடனும், மந்தணத் தன்மையுடனும் வெளியிட்டு வருகின்றது. முந்தைய கல்வியாண்டில் அரசுத் தகவல் தொகுப்பு விவர மையம் மேற்கொண்ட பணிகள் பின்வருமாறு:–

| தேர்வுகள் | மார்ச் 2011 | சிறப்பு துணைத் தேர்வு 2011 | அக்டோபர் 2011 | மொத்தம் |
|---|---|---|---|---|
| மேல்நிலைப்பள்ளி | 7,82,826 | 1,09,132 | 48,597 | 9,40,555 |
| பத்தாம் வகுப்பு | 9,64,402 | 1,13,662 | 81,943 | 11,60,007 |
| மெட்ரிகுலேசன் | 1,49,056 | 7,221 | 4,239 | 1,60,516 |
| ஆங்கிலோ இந்தியன் | 5,000 | 264 | 112 | 5,376 |
| கீழ்த்திசைப்பள்ளி வகுப்புச் சான்றிதழ் | 1,456 | 90 | 30 | 1,576 |
| 8ம் வகுப்பு (குனித் தேர்வு) | 10,331 | – | – | 10,331 |
| ஊரக திறனாய்வுத் தேர்வு | 41,489 | – | – | 41,489 |
| ஆசிரியர் கல்வி பட்டய படிப்பு | 1,00,998 | – | – | 1,00,998 |
| தேசிய திறனாய்வு தேர்வு | 22,141 | – | – | 22,141 |
| தேசிய வழி மற்றும் திறன்படிப்பு உதவித் தொகை திட்டம் | 33,919 | – | – | 33,919 |
| தொழில்நுட்பத் தேர்வு | 11,253 | – | – | 11,253 |
| **மொத்தம்** | **21,22,871** | **2,30,369** | **1,34,921** | **24,88,161** |

75. மார்ச் 2012 முதல் மேல்நிலை மற்றும் உயர்நிலை தேர்வுகள் எழுதும் மாணவ மாணவியருக்கு வழங்கப்படும் சான்றிதழ்களில் நிழற்படம் உள்ளிட்ட கூடுதல் பாதுகாப்பு அம்சங்களை அறிமுகம் படுத்துவதால் ஏற்படும் கூடுதல் பணியை மேற்கொள்ளும் வகையில் அரசுத் தகவல் தொகுப்பு விவர மையத்தின் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த அரசு உத்தேசித்துள்ளது. இதை உறுதிபடுத்தும் வகையில் தேர்வுக்கு முன்னர் நடைபெறவேண்டிய பணிகளை வெளி முகமையில் தமிழ்நாடு மின்னனு நிறுவனம் (எல்காட்) மூலமாக மேற்கொள்ள அரசாணை நிலை எண்.34, நிதி (கூ.த.)த் துறை, நாள் 07.02.2012–ல் ரூபாய் 45.72 இலட்சம் நிதி ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. மேலும் இப்பணிக்கு தேவைப்படும் கட்டமைப்பு வசதிகளை தெரிவு செய்வதற்கான ஒரு தொழில் நுட்ப வல்லுநர் குழு, அரசாணை நிலை எண்.37, நிதி (கூ.த.)த் துறை, நாள் 09.02.2012 மூலம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

**ஆசிரியர்களின் வருங்கால வைப்புநிதி**

**76.** ஊராட்சி ஒன்றிய பள்ளிகள் / நகராட்சி பள்ளிகள் / கல்லூரி கல்வி / அரசு நிதியுதவி பெறும் பள்ளிகள் / அரசு நிதியுதவி பெறும் தொழிற் கல்வி நிலையங்கள் ஆகியவற்றின் ஆசிரியர்களின் வருங்கால வைப்புநிதி கணக்குத்தாள்களை கணினி வழி தொகுக்கும் பணி அரசாணை (நிலை) எண்.**38,** நிதி (படிகள்)த் துறை, நாள் **23.01.1992**–ன்படி அரசுத் தகவல் தொகுப்பு விவர மையத்திடம் ஒப்படைக்கப்பட்டது. முதலில், ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளின் ஆசிரியர்களின் கணக்குத் தாள்கள் தொகுக்கப்பட்டு, சம்மந்தப்பட்ட உதவித் தொடக்கக் கல்வி அலுவலர்களால் அங்கீகரிக்கப்பட்டு தொடக்கக் கல்வி இயக்குநர் மூலம் வழங்கப்பட்டது.

**77.** அரசாணை (நிலை) எண்.**509,** நிதி (கூ.த.)த் துறை, நாள் **15.10.2009**–ன் மூலம் **2007-2008**–ஆம் ஆண்டு முதல் ஊராட்சி ஒன்றிய பள்ளி ஆசிரியர்களுக்கு அங்கீகரிக்கப்பட்ட வருங்கால வைப்பு நிதிக் கணக்குத் தாள்கள் வழங்க அரசு தகவல் தொகுப்பு விவர மைய ஆணையருக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. **2007–**

2008 ஆம் ஆண்டிற்கான கணக்குத் தாள்கள் தொடக்கக் கல்வி இயக்ககம் மூலமாக வழங்கப்பட்டுள்ளது. 2008–2009, 2009–2010 மற்றும் 2010–2011 ஆண்டுகளுக்கான கணக்குத்தாள்கள் தொகுக்கும் பணி நடைபெற்று வருகின்றது.

**பங்களிப்புடன் கூடிய ஓய்வூதியத் திட்டம்**

78. அரசாணை (நிலை) எண்.201, நிதி (ஓய்வூதியம்)த் துறை, நாள் 21.05.2009–ல், கீழ்க்கண்ட துறைகளின் பணியாளர்களுக்கு பங்களிப்புடன் கூடிய ஓய்வூதியத் திட்டத்தின்கீழ் புதிய குறியீட்டு எண்கள் வழங்கி, அதன் கணக்குகளை பராமரிக்கும் பணிகளையும் அரசு இவ்வலுவலகத்திடம் ஒப்படைத்துள்ளது.

(i) ஊராட்சி ஒன்றியப் பள்ளி ஆசிரியர்கள்
(ii) அரசு நிதியுதவி பெறும் பள்ளிகள் மற்றும் கல்வி நிறுவனங்களின் ஆசிரியர்கள்
(iii) ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளின் ஆசிரியர் அல்லாத பணியாளர்கள்
(iv) மாநகராட்சி மற்றும் நகராட்சி பணியாளர்கள்
(v) பேரூராட்சிகளில் பணிபுரியும் மாநிலப் பணியில் சேர்க்கப்படாத பணியாளர்கள்
(vi) ஊராட்சி ஒன்றியங்களில் பணிபுரியும் மாநிலப் பணியில் சேர்க்கப்படாத பணியாளர்கள்

முதற்கட்டமாக பங்களிப்புடன் கூடிய ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் புதிய குறியீட்டு எண்கள் வழங்கும்பணி தொடங்கப்பட்டு, இதுவரையில் இந்த மையம் **82,311** பணியாளர்களுக்கு புதிய குறியீட்டு எண்களை வழங்கியுள்ளது.

**79.** அரசாணை (நிலை) எண்.42, நிதி (கூ.த.)த் துறை, நாள் **17.02.2012**ன் மூலம், மேற்கண்ட பணியாளர்களின் பணம் பெற்று பட்டுவாடா செய்யும் அலுவலர்கள், சந்தாதாரர்கள் வாரியாக பேரேடுகள் பராமரிக்கப்பட வேண்டும் எனவும் இப்பேரேடுகள் உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையால் சரிபார்க்கப்பட்டு சான்றளிக்கப்பட வேண்டும் எனவும் ஆணையிடப்பட்டுள்ளது. இந்த தணிக்கை சான்றிதழின் அடிப்படையில் ஓய்வூதியத்திட்ட கணக்குத் தாள்கள் பராமரிக்கவும், பங்களிப்பு ஓய்வூதிய திட்ட கணக்குகள் தொகுக்கும் பணி, கணினி மயமாக்கும் பணி (ஆன்லைன்) ஒவ்வொரு மாவட்டத்திலும், அந்தந்த துறையால் பணியமர்த்தப்பட உள்ள ஒருங்கிணைப்பு அலுவலரின் ஒத்துழைப்போடு இப்பணி மேற்கொள்ளப்படும்.

**தமிழ்நாடு சத்துணவு மற்றும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்ட பணியாளர்களின் பொது வருங்கால வைப்பு நிதி**

**80.** அரசாணை (நிலை) எண்.108, சமூக நலம் (ம) சத்துணவுத் திட்டத் துறை, நாள் 19.04.2010–ல் இத்துறைக்கு தமிழ்நாடு சத்துணவு மற்றும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்ட பணியாளர்களின் பொது வைப்பு நிதி பணிகள் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட திட்டத்தில் தற்போது 2,06,776 சந்தாதாரர்கள் உள்ளனர்.

**81.** புதிய கணக்கு எண்கள் கோரி விண்ணப்பங்கள் ஆன்லைன் வழியாக தேசிய தகவல் மைய உதவியுடன் பெறப்பட்டு வருகிறது. இதுவரை 1,76,791 விண்ணப்பங்களுக்கான தகவல் பதியும் பணிகள் முடிவடைந்துள்ளன அவற்றுள் 69,650 சந்தாதாரர்களின் புள்ளி விவரங்கள் சம்பந்தப்பட்ட பணம் பெற்று வழங்கும் அலுவலரால் சரிபார்க்கப்பட்டுள்ளது.

# அரசுத்துறை நிறுவனத் தணிக்கைத் துறை

**82.** அரசுத்துறை நிறுவனத் தணிக்கைத்துறை உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையிலிருந்து பிரிக்கப்பட்டு 1969 முதல் இயங்கி வருகிறது. அரசுத்துறைகளின் உட்தணிக்கைப் பணிகளுடன் பல்வேறு சட்டபூர்வ வாரியங்கள் மற்றும் இதர சட்டப்பூர்வமற்ற நிறுவனங்களின் தணிக்கை இத்துறையிடம் ஒப்படைக்கப்பட்டு இருக்கிறது. பின்வரும் வாரியங்கள் மற்றும் நிறுவனங்களின் தணிக்கை இத்துறையால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**சட்டபூர்வ நிறுவனங்களின் தணிக்கை**

| வ. எண். | நிறுவனத்தின் பெயர் |
|---|---|
| (i) | தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் |
| (ii) | தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் |
| (iii) | தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் |
| (iv) | சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம் |
| (v) | தமிழ்நாடு வகஃபு வாரியம் |
| (vi) | தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம் |

வரிசை எண்.(i) முதல் (iv) வரையிலான சட்டபூர்வ வாரியங்களின் ஆண்டுத் தணிக்கையினை உடன் தணிக்கையாக மேற்கொண்டு பல்வேறு கடுங்குறைபாடுகள் குறித்த விவரங்களை அரசுக்கும் பொது நிறுவனங்கள் குழுவின் கவனத்திற்கும் கொண்டு செல்லப்படுகிறது.

**இதர நிறுவனங்களின் தணிக்கை**

கீழ்க்கண்ட இதர நிறுவனங்களின் துறைத் தணிக்கை இத்துறையால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

| **வ. எண்.** | **நிறுவனத்தின் பெயர்** | **எண்ணிக்கை / நிறுவனங்கள்** |
|---|---|---|
| (i) | புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் | **97,325** |
| (ii) | வேளாண்மை விரிவாக்க மையங்கள் | **878** |
| (iii) | எடையளவு நிறுவனங்கள் | **300** |
| (iv) | ஆண்டிற்கு ரூ.0.20 இலட்சம் தொடர் மானியம் மற்றும் ரூ.1.20 இலட்சம் தொடரா மானிய உதவி பெறும் நிறுவனங்கள் | **724** |

**தணிக்கைச் சான்று**

**83.** உதவி மானியம் பெறும் நிறுவனங்களுக்கு மானியத் தகுதி சான்று அந்த மானியத் தொகையின் பயன்பாடு குறித்து தணிக்கை செய்து சான்று அளிக்கப்பட்டு வருகிறது. மேலும், தணிக்கைக்குட்பட்ட சில நிறுவனங்களில் பணியாற்றும் பணியாளர்களின் ஓய்வூதியக் கருத்துருக்கள் மற்றும் வருங்கால வைப்புநிதி கணக்கு முடிப்புகளுக்கு தணிக்கை சான்று இத்துறையால் அளிக்கப்பட்டு வருகிறது.

**இதரப் பணிகள்**

**84.** இத்துறை 14 அரசுத் துறைகளின் உட்தணிக்கைப் பணியினை உதவி இயக்குநர்கள் / ஆய்வர்கள் நிலையில் அலுவலர்களை நியமித்து அத்துறைகளின் தணிக்கைப் பணியினை மேற்பார்வையிட்டு வருகிறது. உட்தணிக்கை பணியாளர்கள் இல்லாத பின்வரும் துறைகளின் தணிக்கைப் பணியினையும் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

| | |
|---|---|
| அ) | தலைமைச் செயலகத் துறைகள் |
| ஆ) | தொழிலாளர் நல ஆணையரின் கீழ் இயங்கும் தொழிலாளர் நல அலுவலகங்கள் |
| இ) | ஒழுங்கு நடவடிக்கை ஆணையர் அலுவலகங்கள் |
| ஈ) | ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை இயக்குநரகம் |

மேலும் மாண்புமிகு முதலமைச்சரின் பொது நிவாரண நிதித் தணிக்கையினை தலைமைச் செயலகம் மற்றும் மாவட்டங்களிலும் ஆண்டுத் தணிக்கை, ஆசிரியர்களின் சேமநல நிதி கணக்கை சரிபார்த்து சான்றளித்தல் மற்றும் இத்துறை தணிக்கை மேற்கொள்ளும் நிறுவனங்களில் பணிபுரியும் பணியாளர்களின் பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத் தணிக்கையினையும் இத்துறை மேற்கொண்டு வருகிறது.

**புதிய தணிக்கை அலுவலகங்கள்**

**85.** ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு சார்நிலை தணிக்கை அலுவலகம் அமைக்கும் அடிப்படையில், திருவள்ளூர், தேனி, பெரம்பலூர், அரியலூர், திருவாரூர் மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் புதியதாக ஆய்வர் அலுவலகங்கள் அமைக்கப்பட்டு சனவரி **2012** முதல் செயல்பட்டு வருகிறது.

**ஓ. பன்னீர்செல்வம்**
நிதி அமைச்சர்